2017 ஜூலை 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 144, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

144—

பாதாள சாக்கடைத் திட்டம்

***6441—திரு. ப. ஆடலரசன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி நகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெய்வமாக இருக்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவரின் நல்லாசியுடனும், கடவுளாக, தெய்வமாக இருக்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும் மாண்புமிகு பேரவைத் தலைவர் நலம் பெற்று வந்ததற்கு நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி நகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்திட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டவுடன், இத்திட்டத்திற்கான நிதி ஆதாரம் இறுதி செய்யப்பட்டு, திட்டம் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.*

திரு. ப. ஆடலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி நகரில் சுமார் ஒன்பதாயிரம் வீடுகளும், இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட வணிக நிறுவனங்களும் உள்ளன. அங்கிருக்கிற கழிப்பறைகளில் உள்ள* septic tank *இல் உறிஞ்சு குழாய்கள் இருக்கின்றன. அந்தப் பகுதி களிமண் நிறைந்ததாக இருப்பதால், உறிஞ்சு குழாய்கள் சரியாகச் செயல்படவில்லை.* Septic tank *எல்லாம் நிரம்பி, தண்ணீர் வடியாமல், வெளியில் வரும் நிலை இருக்கிறது. அதேபோல் அங்கிருக்கிற கழிவுநீர் வடிகால் எல்லாம் ஒரே அளவாக இருப்பதாலும், சமநிலை பரப்புடைய நிலமாக இருப்பதாலும் தண்ணீர் வடிவதற்கு இடமில்லாமல் இருக்கிறது. திருத்துறைப்பூண்டி நகரைச் சுற்றி சுமார் 20–க்கும் மேற்பட்ட குளங்கள் இருக்கின்றன. அந்தக் குளங்களில் கழிவுநீர் வடிகிறது. ஆனால், மழைக் காலங்களில் அந்தக் குளங்கள் நிரம்பியவுடன், கழிவுநீர் கால்வாய்களிலிருந்து தண்ணீர் சாலைகளில் வரும் அவலநிலை இருக்கிறது. அதனால் பல தொற்றுகள் வருவதற்கான சூழ்நிலை ஏற்படுகிறது. இதையெல்லாம் சரிசெய்வதற்கு நீங்கள் உடனடியாக இந்த ஆண்டே பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி திருத்துறைப்பூண்டி நகராட்சியின் மக்கள்தொகை 24,404 ஆகும். இந்த நகராட்சியின் மொத்த பரப்பளவு 11.94 சதுர கிலோ மீட்டர் ஆகும். நகராட்சியில் 22.29 கிலோ மீட்டர் நீள சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. திருத்துறைப்பூண்டி நகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த 38.14 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டது. இந்நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த 48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் திருத்திய திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டவுடன், இத்திட்டத்திற்கான நிதியாதாரம் இறுதி செய்யப்பட்டு, திட்டம் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2017 ஜூலை 6]

முற்பகல் 10–25

திருத்துறைப்பூண்டி நகராட்சி மட்டுமல்ல, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 124 நகராட்சிகள், 12 மாநகராட்சிகளின் அனைத்துப் பகுதிகளிலும் மற்றும் பேரூராட்சிகளிலும்கூட பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டுவரப்பட வேண்டுமென்பதுதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கொள்கை. அதன் அடிப்படையில்தான், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களும் அதைப் படிப்படியாகச் செயல்படுத்தி வருகிறார்கள். அதேபோல், அந்த மாவட்டத்தினுடைய அமைச்சரான, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களும் திருத்துறைப்பூண்டி மற்றும் இதர நகராட்சிகளுக்குக் கண்டிப்பாக பாதாள சாக்கடைத் திட்டம் வேண்டுமென்ற கோரிக்கையை வைத்துள்ளார்கள். நிதியாதாரம் இறுதி செய்யப்பட்டவுடன், கண்டிப்பாக அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.*

திரு. ப. ஆடலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே முத்துப்பேட்டை பேரூராட்சி இருக்கிறது. அதுவும் கிட்டத்தட்ட நகராட்சிக்கு* equal *ஆன ஒரு பேரூராட்சி. அங்கே 18 வார்டுகள் இருக்கின்றன. அங்கே 7, 8, 9, 10 மற்றும் 13–வது வார்டுகளில் கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்கு முன்னர் போடப்பட்ட குடிநீர்க் குழாய்கள் இருக்கின்றன. அந்தக் குழாய்கள் இரும்பாலானவை. அந்தக் குடிநீர்க் குழாய்களுக்கு மேல் கழிவுநீர்க் கால்வாய்கள் அமைக்கப்பட்டதால், அந்த இரும்புக் குழாய்களில் உள்ள குடிநீருடன் கழிவுநீர் கலந்து 20, 30 வீடுகளுக்குச் சென்றது. உடனே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆலோசனையின்பேரில், அந்த இடங்களில் வேறு புதிய குழாய்கள் போடப்பட்டன. இருந்தாலும் மீதி இருக்கின்ற குழாய்களையெல்லாம்* replace *செய்யவேண்டும். அந்தப் பகுதியிலேயும், பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு இணையான ஒரு திட்டத்தை அரசு கொண்டுவருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு பாதாள சாக்கடைத் திட்டம் வேண்டும் என்றார். நான் பேசும்போதுகூட எல்லா நகராட்சிகளுக்கும் பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று சொன்னேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலே செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விதி 110–ன்கீழ் வேலூர் மாநகராட்சிக்கு ரூபாய் 343 கோடி; கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ரூபாய் 442 கோடி என பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு அறிவித்திருக்கிறார்கள். திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு ரூபாய் 325 கோடியும், திருநெல்வேலி மாநகராட்சிக்கு ரூபாய் 326 கோடியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க அறிவிக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய அறிவிப்பில் கும்பகோணம் நகராட்சிக்கு ரூபாய் 55.10 கோடி, இராஜபாளையம் நகராட்சிக்கு ரூபாய் 258 கோடி, ஆம்பூர் நகராட்சிக்கு ரூபாய் 205 கோடி, திண்டிவனம் நகராட்சிக்கு ரூபாய் 210 கோடி, செங்கல்பட்டு நகராட்சிக்கு ரூபாய் 124 கோடி என்று நிதி ஒதுக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசால் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி இந்த பாதாள சாக்கடைத் திட்டங்கள் வரிசையாகத் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன.

அதேபோல பாதாள சாக்கடைக் குழாய்களின் கீழே அல்லது drainage -க்கு கீழே குடிநீர் குழாய்கள் மற்றும் மழைநீர் வடிகால்கள் இருந்தால், எல்லா பகுதிகளிலும் அதை நாங்கள் மாற்றிக் கொண்டிருக்கிறோம். முன்பெல்லாம் அந்தமாதிரியான சூழ்நிலை இருந்தது. 20/25 ஆண்டுகளுக்கு முன்னர் அந்தக் குழாய்களைப் பதிக்கும்போது முறையில்லாமல் சில இடங்களில் அவ்வாறு செய்யப்பட்டது. அந்தப் பணிகளுக்கான டெண்டர் விடும்போது அந்த வேலையைச் செய்யும் contractors அவர்களின் வசதிக்கு ஏற்றாற்போல் அந்தப் பணிகளைச் செய்துவிட்டார்கள். இன்றைக்கு, அம்மா அவர்களின் ஆட்சியில் அவை எல்லாம் சீர் செய்யப்பட்டிருக்கின்றன. அப்படி ஏதாவது ஓரிடத்தில் drainage குழாய்க்கு மேல் குடிநீர்க் குழாய்கள் சென்றால், அவற்றை உடனடியாக இந்த அரசு சீர் செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 ஜூலை 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ரெட்டிகுப்பம் சாலை, VGP சாலை, ஈக்காட்டுத்தாங்கல் போன்ற பல்வேறு இடங்களில் இருக்கிற கழிவு நீரேற்று நிலையங்கள் தனியார்மயமாக்கப்பட்டிருப்பதால், 24 மணி நேரமும் pumping செய்வதில் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. பல்வேறு நேரங்களில், இரவு நேரங்களில் pumping செய்வதற்கு தனியாரால் நியமிக்கப்படும் ஆட்கள் பணி செய்யாமல் இருக்கிறார்கள். எனவே, சைதாப்பேட்டையின் பெரும் பகுதிகளில் பாதாள சாக்கடையில் அடைப்புகள் ஏற்பட்டு, சாலைகளில் கழிவுநீர் ஆறாக ஓடிக்கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தனியார்மயமாக்கப்பட்ட அந்தக் கழிவு நீரேற்று நிலையங்களை உடனடியாகக் கண்காணிப்பாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்னை மாநகராட்சியின் மேயராக இருந்தவர். அவருடைய சைதாப்பேட்டை தொகுதியில் உள்ள தனியார்மயமாக்கப்பட்ட மூன்று கழிவு நீரேற்று நிலையங்களில் சரியாக வேலை நடைபெறவில்லை என்று தெரிவித்திருக்கிறார். அதிகாரிகளைக் கொண்டு அந்த இடங்கள் கண்டிப்பாக ஆய்வு செய்யப்பட்டு, சரி செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி அவர்கள்.

திரு. விருகை V.N. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல ஒரு இலட்சியம், வெல்வது நிச்சயம், மக்களால் நான், மக்களுக்காகவே நான், (மேசையைத் தட்டும் ஒலி) என வாழ்ந்து மறைந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா

அவர்களை வணங்குகிறேன். தமிழக மக்களின் அன்பையும், ஆதரவையும் பெற்று அம்மாவின் அரசை வழிநடத்திச் செல்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

முற்பகல் 10–30

விருகம்பாக்கம் தொகுதி, 137–வது வட்டத்தில், நாகாத்தம்மன் கோயில் தெரு, துர்க்கை அம்மன் கோயில் தெரு, எம்.ஜி.ஆர். தெரு, இந்திரா தெரு, பாரதியார் தெரு, நேரு தெரு, அஞ்சுகம் தெரு, காமராஜ் தெரு ஆகிய தெருக்களில் பாதாள சாக்கடைத் திட்டம் இல்லாமல் உள்ளது. அங்கே வசிப்பவர்கள் மழைநீர் கால்வாயிலும், அவரவர் வீட்டிற்கு முன்பும் உறையை இறக்கி, அதில் இணைப்பைச் செலுத்துகின்றார்கள். அதனால் அங்கே சுகாதாரக் கேடு ஏற்படுகிறது. ஆகவே, அந்தப் பகுதிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டத்தை அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவுடன் வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய தொகுதியில் ஒரு சில வீதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் பொறுத்தவரையில், அவருக்கு வாக்களித்த அவருடைய தொகுதி மக்களின்பால் இருக்கின்ற அன்பால், சாலை அமைப்பது போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி நேரடியாகவே மனுக்களை அளிப்பார்கள். அவர் கொடுத்த கோரிக்கைகளையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிறைவேற்றித் தந்திருக்கின்றது. அதேபோன்று இந்தக் கோரிக்கையும் நிச்சயமாக நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.

2017 ஜூலை 6]

திரு. என். சுரேஷ் ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைமையிடமாக இருக்கின்ற நாகர்கோவில் நகராட்சிப் பகுதியில் 2012 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் 5 ஆண்டுக்காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவை முடிவு பெறாத நிலையில், 10 சதவிகித சாலைகள்தான் முடிக்கப்பட்டு நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. ஒப்படைக்கப்பட்ட அந்த 10 சதவிகித சாலைகளில் பொதுமக்களுக்கு இடையூறாக இருக்கின்ற சாலைகளைச் சீர் செய்ய வேண்டும் என்று நகராட்சியிடம் கேட்டதற்கு, நிதி இல்லை என்ற பதில்தான் நகராட்சியிடமிருந்து வருகின்றது. அந்தச் சாலைகள் தொடர்ந்து பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. பாதாள சாக்கடைத்திட்டப் பணிகளும் மிகவும் மந்தமான நிலையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளை வேகப்படுத்தவும், பணிகள் முடிந்த இடங்களில் சாலைகளை அமைத்துத் தரவும் அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெறுகின்ற இடங்களில், குழாய்கள் பதிக்கப்பட்ட அந்தச் சாலைகளைச் சீர் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். இதற்கு முன்னால் உங்கள் ஆட்சிக் காலத்தில் எடுக்கப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டங்களில் குறிப்பாக, கோயம்புத்தூர், மதுரை போன்ற மாநகராட்சிகளிலெல்லாம் சாலைகளைச் சீரமைக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலத்தில் நிதி ஒதுக்கினார்கள். பாதாள சாக்கடைத் திட்டங்களை எடுக்கும்போது, அந்தச் சாலைகளைச் செப்பனிடுவதற்காகவும் சேர்த்துதான் நிதி ஒதுக்க வேண்டும். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் பல இடங்களுக்கு அதற்கான நிதியானது ஒதுக்கப்படவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்திற்கும் நிதி ஒதுக்கித் தந்தார்கள். தேர்தலுக்கு முன்பே 2016 ஆம் ஆண்டில் திருப்பூர், கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, சேலம்*

போன்ற இடங்களுக்கெல்லாம் நிதி ஒதுக்கினார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதிகள் அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, பழுதடைந்த அந்த சாலைகளைச் சீர்செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கப்படும். பாதாள சாக்கடைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு சில இடங்களில் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான இடம் கிடைப்பதில்லை. சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்கு நாம் ஓர் இடத்தை தேர்வு செய்வோம். ஆனால், அந்த இடத்தில் உள்ள பொது மக்கள் எதிர்ப்பு தெரிவித்து நீதிமன்றத்திற்குச் சென்றுவிடுகிறார்கள். நிறைய இடங்களில் சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதில்தான் பிரச்சினை உள்ளது; road laying ஒரு பிரச்சினையே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இடத்தில் அந்த மாதிரியான பிரச்சினை இல்லையென்றால், பாதாள சாக்கடைத் திட்டம் விரைவில் முடிக்கப்படும். இந்த பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளில் எத்தனை சதவிகிதம் முடிந்துள்ளது, இந்தப் பணிகளை முடிப்பதற்கு இன்னும் என்னென்ன தேவை போன்றவை குறித்த ஆய்வுக் கூட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நடத்தி இருக்கின்றார்கள். கண்டிப்பாக இந்தத் திட்டம் விரைவாக முடித்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 145, மாண்புமிகு உறுப்பினர் திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

145—

பொறியியல் கல்லூரி

***108—திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதியில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*